# வேர்ச்சொல்லைக் கொண்டு – வினைமுற்று, வினையெச்சம், வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் ஆகியவற்றைக் கண்டறிதல்

| வ. எண் | வேர்ச்சொல் | வினைமுற்று | வினையெச்சம் | வினையாலணையும் பெயர் | தொழிற்பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | கூறு | கூறினான் | கூறி | கூறியவரை | கூறுதல் |
| 2. | செப்பு | செப்பினான் | செப்பி | செப்பியவன் | செப்புதல் |
| 3. | இயம்பு | இயம்பினார் | இயம்பி | இயம்பியவர் | இயம்புதல் |
| 4. | ஓது | ஓதினார் | ஓதி | ஓதியவர் | ஓதல் |
| 5. | அறி | அறிந்தான் | அறிந்து | அறிந்தவன் | அறிதல் |
| 6. | உணர் | உணர்ந்தார் | உணர்ந்து | உணர்ந்தவன் | உணர்தல் |
| 7. | நறுக்கு | நறுக்கினார் | நறுக்கி | நறுக்கியவன் | நறுக்குதல் |
| 8. | நோக்கு | நோக்கினாள் | நோக்கி | நோக்கியவள் | நோக்குதல் |
| 9. | குரை | குரைத்தது | குரைத்து | குரைத்ததை | குரைத்தல் |
| 10. | வேய் | வேய்ந்தான் | வேய்ந்து | வேய்ந்தவன் | வேய்தல் |
| 11. | கொடு | கொடுத்தான் | கொடுத்து | கொடுத்தவன் | கொடுத்தல் |
| 12. | படு | படுத்தார் | படுத்து | படுத்தவன் | படுத்தல் |
| 13. | நடி | நடித்தாள் | நடித்து | நடித்தவள் | நடித்தல் |
| 14. | பெறு | பெற்றான் | பெற்று | பெற்றவர் | பெறல் |
| 15. | உண் | உண்டான் | உண்டு | உண்டவர் | உண்ணல் |
| 16. | செல் | சென்றார் | சென்று | சென்றவன் | செல்லல் |
| 17. | வீழ் | வீழ்ந்தான் | வீழ்ந்து | வீழ்ந்தவன் | வீழ்தல் |
| 18. | காண் | கண்டான் | கண்டு | கண்டவர் | காணல் |
| 19. | தேர் | தேர்ந்தார் | தேர்ந்து | தேர்ந்தவன் | தேர்தல் |
| 20. | குடி | குடித்தான் | குடித்து | குடித்தவர் | குடித்தல் |
| 21. | பறி | பறித்தான் | பறித்து | பறித்தவர் | பறித்தல் |
| 22. | ஒடி | ஒடித்தான் | ஒடித்து | ஒடித்தவன் | ஒடித்தல் |
| 23. | ஓடு | ஓடினார் | ஓடி | ஓடியவர் | ஓடுதல் |
| 24. | அடி | அடித்தார் | அடித்து | அடிப்பவர் | அடித்தல் |
| 25. | பூசு | பூசுனார் | பூசி | பூசினார் | பூசுதல் |
| 26. | இயற்று | இயற்றினார் | இயற்றி | இயற்றியவன் | இயற்றல் |
| 27. | எழுது | எழுதினார் | எழுதி | எழுதியவர் | எழுதுதல் |
| 28. | வரை | வரைந்தான் | வரைந்து | வரைந்தவர் | வரைதல் |
| 29. | குத்து | குத்தினார் | குத்தி | குத்தியவன் | குத்துதல் |
| 30. | பாய்ச்சு | பாய்ச்சினார் | பாய்ச்சி | பாய்ச்சியவன் | பாய்ச்சல் |
| 31. | பருகு | பருகினான் | பருகி | பருகியவன் | பருகுதல் |
| 32. | அரி | அரிந்தான் | அரிந்து | அரிந்தவன் | அரிதல் |
| 33. | உழு | உழுதார் | உழுது | உழுதவன் | உழுதல் |
| 34. | எழு | எழுந்தான் | எழுந்து | எழுந்தவன் | எழுதல் |
| 35. | வா | வந்தார் | வந்து | வந்தவன் | வருதல் |
| 36. | போ | போனார் | போய் | போனவன் | போதல் |
| 37. | வை | வைத்தாள் | வைத்து | வைத்தவள் | வைத்தல் |
| 38. | ஒழி | ஒழித்தார் | ஒழித்து | ஒழித்தவன் | ஒழித்தல் |
| 39. | பேசு | பேசினார் | பேசி | பேசியவர் | பேசுதல் |
| 40. | கல் | கற்றான் | கற்று | கற்றவன் | கற்றல் |
| 41. | அகழ் | அகழ்ந்தார் | அகழ்ந்து | அகழ்ந்தவர் | அகழ்தல் |
| 42. | பொறு | பொறுத்தார் | பொறுத்து | பொறுத்தவர் | பொறுத்தல் |


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 43. | கேள் | கேட்டார் | கேட்டு | கேட்டவர் | கேட்டல் |
| 44. | ஏந்து | ஏந்தினார் | ஏந்தி | ஏந்தியவர் | ஏந்துதல் |
| 45. | விரும்பு | விரும்பினார் | விரும்பி | விரும்பியவர் | விரும்புதல் |
| 46. | அழை | அழைத்தார் | அழைத்து | அழைத்தவர் | அழைத்தல் |
| 47. | இசை | இசைந்தாள் | இசைந்து | இசைந்தவள் | இசைதல் |
| 48. | நல்கு | நல்கினாள் | நல்கி | நல்கினவள் | நல்குதல் |
| 49. | பிழை | பிழைத்தான் | பிழைத்து | பிழைத்தவர் | பிழைத்தல் |
| 50. | பூண் | பூண்டான் | பூண்டு | பூண்டவன் | பூணுதல் |

## வேர்ச்சொல் – ஓர் ஆய்வு

ஆங்கிலத்தில் வேர்ச்சொல் ஆய்வினை **Etymological studies** என்பர். 'Etyma' என்ற சொல்லிற்கு உண்மைப் பொருள் (Real meaning) என்பது பொருள். மேலைநாடுகளில் வேர்ச்சொல் ஆய்வினை 'Philogy' என்று கூறினார். **'Philogy'** என்பதற்கு **'விருப்பமான ஆய்வு'** என்பது பொருள்.

**'உவரி'** என்னும் ஒரு தமிழ்ச்சொல்லினை, அகராதியும், வேர்ச்சொல் அகராதியும் இருவேறு வகையில் விளக்கப்படுத்தும். **உவரி = உப்பு**, கடல் இவ்விளக்கத்தினை அகராதியில் காணலாம். ஆனால் **'உவர்'** என்னும் உப்பினைக் கொண்டிருப்பதால் கடலானது **உவரி** எனப்படுகிறது என வேர்ச்சொல் அகராதி கூறுகிறது.

**'உ'** என்னும் உயர்வுப்பொருள் சுட்டடியாக **உ – உக – உகர்ப்பு – உவர் – உவரி** என இச்சொல் பிறந்தது. **மகன் – மவன்** போல் ககரம் வகரமாகி, **உகர் – உவர்** ஆனது. **உகப்பே உயர்வு** என்பது தொல்காப்பியம்.

பாத்திகளில் தேக்கி வைக்கப்பட்ட கடல் நீர் காய்ந்ததும் கடல் நீரிலிருந்த ஒரு வெண் பொருள் உப்பிக் கொண்டு, நிலத்தில் மேல் எழும். இதனால் இவ்வெண்பொருள் 'உப்பு' என்னும் பெயர் பெற்றது.

விள்ளல், விண்டல், விழைதல் ஆகிய சொற்களின் அடிப்பகுதி **விள்** என்பது. **'விள்'** என்ற அடிச்சொல்லிற்கு **'விருப்பம்'** என்பது பொருள். **'விள்'** என்னும் அடிப்பகுதிதான் வங்கம் – பங்கம் ; வண்டி– பண்டி ; வகர பகர மாற்றத்தில் மேலை இந்தோ–ஐரோப்பிய மொழிகளில் விள் – phil எனத் திரிந்தது. **'விருப்ப ஆய்வு'** என்பதன் வழியாகவே, **வேர்ச்சொல் ஆய்வு philology** ஆனது என்பார் பாவாணர்.

**உவர் – over**

உப்பி மேலெழுந்து உப்பு, உகப்பி மேலெழுந்தது உக – உகர் – உவர். இவ் 'உவர்' மேலெழுதல் பொருளிலும் கூடுதல் பொருளிலும் இந்தோ – ஐரோப்பியத்தில் உபர் – உபரியானது.

கீழே இந்தோ – ஐரோப்பியமாகிய சமஸ்கிருதத்தில் 'உபரியே' மேலை இந்தோ – ஐரோப்பிய மொழிகளில், 'ஓவர்' என்பதற்கு **'வேர்ச்சொல்'** என்று ஆங்கில வேர்ச்சொல் அகராதி அறிஞர் **கீன்ஸ்** கூறியுள்ளார்.

(The concise Dictionary of ENGLISH ETYMOLOGY – Walter w.skeat)

**கூழாங்கல்**

மலைமேலிருந்து ஆற்றிலும், அருவியிலும் அடித்துவரப்படும் கூரான கற்கள், பல இடங்களிலும் மோதி மோதி குழைவாகி விடுகிறது. இக்குழைவான கல்லே கூழ் + ஆம் + கல் = கூழாங்கல் என்றானது.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in